## தலைப்பு 102 – நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 102 – நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டுக்கான கட்டுநிதி கோரிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கோரப்பட வேண்டிய கட்டுநிதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 3,549 மில்லியன் ஆக இருந்த போதிலும் ரூபா 74,081 மில்லியன் கோரப்பட்டு ரூபா 54,374 மில்லியன் கட்டுநிதி பெறப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்ட மதிப்பீடுகளுக்கு மேலதிகமாக நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமையின் காரணமாக அரசாங்கத்தால் அவ்வப்போது எடுக்கப்பட்ட பல்வேறு கொள்கை ரீதியான தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு உரிய சமூக நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பல்வேறு செயற்திட்டங்களுக்காக மேலதிக நிதியேற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக திட்டமிடப்பட்ட கட்டுநிதியின் அளவினை விட குறைந்த கட்டுநிதியை பெற வேண்டி ஏற்பட்டிருந்தது. | முறையான பிரகாரம் திருத்தங்களை மேற்கொண்டு சரியாக திட்டமிடல் வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

#### 2.2.1 நிதியேற்பாட்டின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 செலவின விடயங்கள் தொடர்பாக 2023 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட ரூபா 7,500,000 ஆன மொத்த மதிப்பீட்டு நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினங்கள் சமர்ப்பிக்கப்படாமை. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடு தயாரித்தல் சரியாகவும் பொருத்தமாகவும் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு 09 செலவின விடயங்களுக்காக 2023 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட ரூபா 506,400,000 ஆன தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 392,195,891 பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. அது செலவின விடயங்களின் மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 56 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | உத்தியோகத்தர்கள் இடம் மாற்றம் பெற்றுச் சென்றமை மற்றும் பாதீட்டு சுற்றறிக்கை 01/2023 மற்றும் 02/2023 இன் பிரகாரம் மேலதிக செலவினங்கள் வரையறுக்கப்பட்டமை மற்றும் கட்டுப்படுத்துதல், பெறுகை நடவடிக்கைகள் எதிர்பார்த்த பிரகாரம் மேற்கொள்ளப்படாமை, கட்டிட வாடகைக்காக நிதியேற்பாட்டு செலவினம் ஒன்று ஏற்படாமை, கடன் மீதி பதிவளிப்பதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டமை, மூலதன வடிவிலான பராமரிப்பு தேவைகள் ஏற்படாமையின் காரணமாக நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமல் சேமிப்பதற்கு காரணமாக இருந்தது. | நிதியேற்பாட்டை உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ரூபா 75,000,000 ஆன ஆரம்ப மதிப்பீட்டு நிதியேற்பாட்டுடன் ‘‘ஏனைய’’ மீண்டெழும் செலவின விடயத்திற்காக நான்கு சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 376,800,000 குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடு மற்றும் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் மேலதிக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவின விடயத்தில் ரூபா 356,302,119 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | • அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்படாத செலவினம் செய்யப்பட்டமை மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை உயர்வடைந்து சென்றதன் காரணமாக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலமும் மற்றும் நிதிப்பிரமாணம் 66 இன் கீழும் மேலதிக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமை.<br>• அதிமேதகு சனாதிபதி அவர்களுடன் 2023.02.16 ஆந் திகதி இடம் பெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் சர்வதேச நிதியங்களில் நிதி மூல நிகழ்ச்சித் திட்டங்களில் செயல் முன்னேற்றம் தொடர்பான விளம்பர நடவடிக்கைகள் அமுல்படுத்துதல் நிறுத்தப்பட்டமை மற்றும் விசேட பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு பொதுவான செலவினத்திற்காக ஈடுபடுத்தப்படாமை நிதியேற்பாடு சேமிப்பதற்கான காரணம் ஆகும். | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடு தயாரித்தல் சரியாகவும் பொருத்தமாகவும் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 2023 ஆம் ஆண்டில் பாதீடு செய்யப்பட்ட மொத்த செலவின மதிப்பீடு ரூபா 3,502,435,000 ஆக இருந்ததுடன் இந்த மதிப்பீட்டு தொகை போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் குறை நிரப்பு மதிப்பீட்டின் கீழ் கூட்டுமொத்தமாக ரூபா 55,921,882,687 மேலதிக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட மொத்த செலவின மதிப்பீட்டு நிதியேற்பாடு மற்றும் நிதிப்பாட்டைக் கவனத்தில் கொள்ளும் போது குறைநிரப்பு நிதியேற்பாட்டின் கீழ் மேலதிக நிதியேற்பாடு வழங்குதல் முரண்கள் 1497 சதவீதம் ஆக காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டிற்காக பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் போது அரச தனியார் கூட்டு முயற்சி தேசிய முகவராண்மை மற்றும் அரச பொது முயற்சிகள் மீள் கட்டமைப்பு அலகுக்காக தேவையான நிதியேற்பாடு தொடரபாக கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் அதற்காக மேலதிக நிதியேற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டமையால் நலன்புரி சபைகளின் கீழ் 102-01-02-13-1501 செலவின விடயத்திற்காக தேவையான நிதியேற்பாடு தொடர்பாகவும் கோரிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது மேலதிக நிதியேற்பாடு பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தமை. | மேற்படி |
| (உ) | 2023 ஆம் ஆண்டின் போது குறைநிரப்பு நிதியேற்பாட்டின் கீழ் ஒதுக்கப்பட்ட மேற்கூறப்பட்ட ரூபா 55,921,882,687 ஆரம்ப பாதீட்டு மதிப்பீடு நிதியேற்பாடு ஒதுக்கப்படாதிருந்த 19 செலவின விடயங்களுக்காக ரூபா 55,486,847,400 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நிதியேற்பாட்டில் ரூபா 52,406,189,937 செலவிடப்பட்டிருந்ததுடன் கூட்டுமொத்தமாக ரூபா 3,067,135,497 சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பில் 03 செலவின விடயங்களின் கூட்டுமொத்தமான ரூபா 20,500,000 எந்த | • நலன்புரி நலன் சபையில் தகைமை பெற்ற நலனாளிகளின் ஒரு பகுதியினருக்கு கணக்கு திறப்பதில் தாமதம் ஏற்பட்டமை, IWMS தரவு முறைமையில் உரிய உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமை.<br>• அரச தனியார் கூட்டுமுயற்சி தேசிய முகவராண்மை நிறுவனம் மற்றும் பொது முயற்சிகள் மீள் கட்டமைப்புப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் முழுமையாக நியமிக்கப்படாமை, இந்த பிரிவு அரசாங்கத்தின் அலுவலகத்தில் காணப்பட்டமை, பாதீட்டு சுற்றறிக்கை 01/2023 | மேற்படி |

| | |
|---|---|
| ஒன்றுக்கும் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மற்றும் 02/2023 இன் பிரகாரம் செலவினங்கள் வரையறுக்கப்பட்டமை, எரிபொருள் படி உரித்தான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமை, NAPPP இற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியில் பங்களிப்பு கிடைத்தமை, மூலதன வடிவிலான பராமரிப்பு தேவைகள் ஏற்படாமையினால் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. |

## 2.2.2 அமைச்சின் பிரிவுகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிதியேற்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் போது அரச நிறுவனங்கள் மற்றும் அமைச்சின் 05 பிரிவுகளுக்கு 09 மூலதன செலவின விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்த கூட்டுமொத்தமான ரூபா 277,574,700 ஆன தேறிய நிதியேற்பாட்டின் கூட்டுமொத்தமாக ரூபா 260,964,398 அதாவது 42-100 சதவீதம் வரையிலான வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நலன்புரி நலன் சபையில் கொள்வனவு செய்வதில் தாமதம் ஏற்பட்டமை, ஈ அரச பெறுகை செயற்திட்டத்தின் மீள்திருத்த உடன்படிக்கையுடன் உடன்படிக்கை செய்தல் தாமதம் அடைந்தமை மற்றும் உலக வங்கியின் உதவிகளில் செலவினங்கள் செய்தல் அரச தனியார் கூட்டு முயற்சி தேசிய முகவராண்மை நிறுவனத்தில் அலுவலகம் ஏனைய அரசாங்கத்தின் கட்டிடம் ஒன்றில் நடாத்தப்பட்டமையினால் பராமரிப்பு செலவினம் குறைவடைந்தமை, மூலதன வடிவிலான பராமரிப்பு தேவைகள் ஏற்படாமை, ஆசிய அபிவிருத்தி வங்கியின் பங்களிப்பு கிடைத்தமை, அலுவலக செலவினங்கள் பிரதமர் அலுவலகத்தால் செலவிடப்பட்டமை, அரசாங்கத்துக்குரிய பொது முயற்சிகள் மீள்கட்டமைப்பு அலகில் அநேக பராமரிப்பு நடவடிக்கைகள் பிரதமர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டமை, வரி முறையீட்டு ஆணைக்குழுவின் மூலதன வடிவிலான பராமரிப்புத் தேவைகள் ஏற்படாமையின் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு பயன்படுத்தப்பட வில்லை. | நிதியேற்பாடு, உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கொடுப்பனவு மற்றும் தீர்த்து வைத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சேவையை விட்டுச் சென்ற 03 உத்தியோகத்தர்களிடமிருந்து 10 - 20 வருடங்கள் வரையான காலத்தை விஞ்சிய அறவிட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 469,418 மற்றும் 1 – 3 வருடங்கள் வரையிலான காலத்தை விஞ்சிய அறவிட வேண்டிய ரூபா 119,073 கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 588,491 நிலுவைக் கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமைச்சினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து 2024 சனவரி மாதத்திற்காக ரூபா 5,000.00 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதியினை தவணையாக அறவிடுவதற்காக மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மற்றும் மேலும் கடன் கொடுத்தோரினால் செலுத்தப்படாதிருக்குமாயின் அந்த தொகையை பிணையாளரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மேலும் ஒரு உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதி தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவைக் கடனை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சுக்கு நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,633,505 ஆகும். இந்த கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமைச்சுக்கு அறவிடப்பட்டிருக்கவில்லை. | முன்னாள் காணப்பட்ட தேசியக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவலல்கள் அமைச்சு கலைக்கப்பட்டதுடன் அதன் நிர்வாக நடவடிக்கைகள் நிதி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதனால் தேசியக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவலல்கள் அமைச்சின் முற்பணக் கணக்கு மீதி நிதி அமைச்சின் முற்பணக் கணக்கு இலக்கம் 10201 இற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் அந்த கடன் மீதியை அறவிட வேண்டிய நபர்கள் சேவையாற்றுகின்ற இடங்களை இனங்கண்டு அறவிடுவதற்கோ அல்லது அறவிட முடியாதிருக்குமாயின் அறவிடமுடியாத கடன் மீதிகளை நிதிப்பிரமானம் 113(3) இன் பிரகாரம் கடன் மீதியை பதிவளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | மேற்படி |

| | | |
|---|---|---|
| (இ) ஓய்வு பெற்றுச் சென்ற 03 உத்தியோகத்தரிடம் இருந்து 20 வருடங்களை விஞ்சிய ரூபா 150,623 தொகையும், 5 – 10 வருடங்களுக்கு இடையிலான ரூபா 99,425 தொகையும் ஆக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்த நிலுவைக் கடன் மீதி ரூபா 250,048 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டி இருந்த 1 வருடத்திற்கு குறைந்த ரூபா 66,270 கடன் மீதி தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. ஏனைய உத்தியோகத்தரிடம் இருந்து கடன் மீதி தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மேலும் அறியத்தருகின்றோம். | மேற்படி |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியங்களைப் பயன்படுத்தி அமுல்படுத்தப்பட்ட 02 செயற்திட்டங்கள் தொடர்பாக 03 செலவின விடயங்களில் மொத்த தேறிய நிதியேற்பாடான ரூபா 631,500,000 தொகையில் ரூபா 513,600,350 அதாவது தேறிய நிதியேற்பாட்டில் 51 சதவீதம் முதல் 84 சதவீதம் வரையிலான அளவு பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரிவினை நவீன மயப்படுத்தும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முடிவடைந்தமை, உள்ளக திறைசேரி தகவல் முறைமை செயற்திட்டத்தில் உள்நாட்டு நிதியம் பயன்படுத்தப்பட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் வருடம் முழுவதும் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமை மற்றும் ITMIS முறைமையின் செயற்பாடுகள் ஆண்டின் ஆரம்ப முதல் அரைப் பகுதியில் கைவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்ட செலவினங்களை மேற்கொள்ள முடியாதிருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடு செயற்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

#### 3.1.2 பொது முயற்சிகளின் மீள் கட்டமைத்தல்

பொது முயற்சிகளின் மீள் கட்டமைப்பிற்காக அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் பொது முயற்சிகள் மீள் கட்டமைப்புப் பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டதுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஒக்தோபர் 25 ஆம் திகதிய இலக்கம் MF/063/CM/2022/215 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 37 பேர்களை உடைய பதவியணியினர் இந்தப் பிரிவிற்கு அங்கீகரிக்கப்பட்டதுடன் 2023 செப்தெம்பர் 25 ஆம் திகதிய இலக்கம் MF/052/CM/2022/177 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் படி ஆட்சேர்த்தல் நடைமுறை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்றை அங்கீகரித்துக் கொள்ளாமல் பிரிவிற்காக ஒப்பந்த அடிப்படையில் 12 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். | இதன் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் 2022 ஒக்தோபர் மாதம் 11 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் MF/052/CM/2022/215 பொது முயற்சிகள் மீள் கட்டமைப்புப் பிரிவிற்காக 37 பேர்களை உடைய பதவியணியினரை சேர்ப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த பிரிவிற்காக தற்காலிகமாக சேர்க்கப்பட்ட பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் நடைமுறை தயாரிக்கப்பட்டிருந்தது. விசேடமாக இந்த பிரிவில் முதன்மை இலக்காக அரசாங்கத்திற்குரிய சகல தொழில் முயற்சிகளையும் மீள்கட்டமைப்பதற்கான கொள்கை ஒன்றைத் தயாரித்து, அதற்குத் தேவையான ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றை உருவாக்குவதாகும். அதன் பிரகாரம் அந்த ஸ்தாபிக்கப்படுகின்ற நிறுவனங்களின் பிடிப்புக் கம்பனி (Holding Company) இன் கீழ் சேர்க்கப்பட்ட பதவியணியினருக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை தயரிரப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் விசாரணை செய்து தேவையான மற்றும் தகுதியான மற்றும் திறன் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை மீள் கட்டமைக்கும் கொள்கையில் குறிப்பிடப்பட்ட 02 ஆவது மூலதத்துவங்களில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் பிடிப்புக் கம்பனியை ஸ்தாபித்தல் மற்றும் 2023 மே 15 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்ட இலக்கம் MF/036/CM/2023/107 மற்றும் 2023.05.08 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்பின் 4.2 மற்றும் 4.3 ஆம் பந்திகளின் பிரகாரம் அமைச்சரவைக் குறிப்பில் உள்ளடக்கப்பட்ட | பிடிப்புக் கம்பனியை ஸ்தாபிப்பதற்காக முன்மொழியப்பட்டு அதன் வரைவு தயாரிக்கப்பட்டு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் அந்தப் பணிகள் உத்தேசிக்கப்பட்ட பொது முயற்சிகள் மறுசீரமைப்பு சட்டத்தில் உள்ளடக்கப்பட்டு அதனை ஆரம்பித்தல் பொருத்தமானது என்பது அரசாங்கத்தின் கொள்கையாகும். அதனால் | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை மறுசீரமைக்கும் கொள்கை இணைப்பு 02 மற்றும் 03 இன் நிரற்படுத்தப்பட்ட 72 நிறுவனங்கள் மீள்கட்டமைப்பதற்காக பிடிப்புக் கம்பனி (HOCO) இற்கு அதன் பிடிப்புக் கம்பனியாக கையளிப்பதற்கு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவ்வாறான துணைக் கம்பனி (HOCO) ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறப்பட்ட முன்மொழிவு தற்போது அமுல்படுத்தப்பட வில்லை. | |
| (இ) | கூறப்பட்ட பிரகாரம் பிடிப்புக் கம்பனி (HOCO) இற்கு கையேற்று மீள்கட்டமைப்பு முன்மொழியப்பட்ட மேற்கூறப்பட்ட குறிப்பில் உள்ளடக்கப்பட்ட பொது முயற்சிகளை மீளமைக்கும் கொள்கையின் இணைப்பு 02 இன் நிரலில் குறிப்பிடப்பட்ட 08 நிறுவனங்களுக்கு இடையே 07 நிறுவனங்கள் தற்போது வரையிலும் கட்டுப்பாட்டு கம்பனிக்கு கையேற்கப்படாமல் பொது முயற்சிகள் மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்குச் சொந்தமான பங்குகளை அகற்றுவதற்கு விநியோகிப்பதற்கு (Divesture) கொடுக்கல் வாங்கல் ஆலோசனையாளரை சேர்த்து கேள்வி கோரும் செயற்பாடுகளில் சில கட்டங்கள் அமுல்படுத்தப்படுத்தப்பட்டுள்ளமையும் இதன் கீழ் உள்ள ஒரு நிறுவனம் சட்டமாதிபரின் ஆலோசனையின் அடிப்படையில் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | இதன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள 08 நிறுவனங்களுக்கு இடையே 07 நிறுவனங்கள் தற்போது பொது முயற்சிகள் மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்குச் சொந்தமான பங்குகளை அகற்றுவதற்கு (Divestiture) கொடுக்கல் வாங்கல் ஆலோசனையாளரை சேர்த்து கேள்வி கோரும் செயற்பாடுகளில் சில கட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக அரசாங்கத்தின் முன்னுரிமையின் பிரகாரம் 2023.03.13 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது இலக்கம் 23/0431/604/046 என்ற அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் Water Edge நிறுவனம் சட்டமா அதிபரின் ஆலோசனையின் அடிப்படையில் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. | மேற்படி |

### 3.1.3 அரச தனியார் கூட்டு முயற்சிக்கான தேசிய நிறுவனம்

அரசாங்க சேவையை செயற்திறனாக நிறைவேற்றும் வகையில் அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையின் ஒத்துழைப்புடன் அரச தனியார் கூட்டுமுயற்சி திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதை நோக்காகக் கொண்டு 2022 செப்தெம்பர் 13 ஆந் திகதி அமைச்சரவையினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் அரச தனியார் கூட்டு முயற்சி தேசிய நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் விசாரணை செய்து தேவையான பதவியணியினரை ஆட்சேர்த்தல் மேற்கொள்ள வேண்டி இருந்த போதிலும் 2024 மே 06 ஆந் திகதி வரையிலும் பதவியணியினருக்காக 11 பேர் 03 வருட ஒப்பந்த காலத்திற்காக சேர்க்கப்பட்டிருந்த போதிலும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | 2023.09.22 ஆந் திகதி எங்களால் பதவியணியினர் சேர்த்தல் மற்றும் தொடர்புடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. (Scheme of Recruitment) அந்த விடயங்கள் தொடர்பாக இதுவரை பதில் கிடைத்திருக்க வில்லை. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஆட்சேர்த்தல் நடைமுறை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ஆ) | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அரச தனியார் கூட்டுமுயற்சி நிறுவனங்கள் 12 செயற்திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்ததுடன் மேலும் 07 செயற்திட்டங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயல் திட்டத்தை அமுல்படுத்தும் போது குறித்துரைத்த சட்ட வரைவு ஒன்று காணப்படுதல் மிகவும் முக்கியமாக இருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தனியார் கூட்டுமுயற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் சட்ட ரீதியான வரைவு ( PPP Bill ) வரைவு மட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தனியார் கூட்டு முயற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் சட்ட ரீதியான சட்டகம் (PPP Bill) நிதியமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் தனியார் கூட்டுமுயற்சி நிகழ்ச்சித் திட்டத்தை சட்ட ரீதியான கட்டமைப்பை அங்கீகரிக்கும் வரை PPP செயற்திட்டத்திற்காக ''Guidelines on Government Tender Procedure - Part II'' "மற்றும் அரச நிதி திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் ''02/2019'' பயன்படுத்தப்படுகின்றது. | செயல்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன் அதற்குரிய சட்டரீதியான ஏற்பாட்டை வழங்குதல் வேண்டும். |

**3.2 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) 2022 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை அச்சிடல்**<br>அமைச்சின் 2022 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த அறிக்கை Digital Printing முறையின் கீழ் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரதிகள் ஒன்று முறையே ரூபா 30,894 தொகை, ரூபா 38,605 மற்றும் ரூபா 28,641 வீதம் ரூபா 4,285,237 செலவில் 120 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்ததுடன் மீண்டும் கட்டளை இடலின் கீழ் Offset Printing முறையை பயன்படுத்தி அந்த வழங்குனரிடம் இருந்து சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பிரதிகள் ஒன்று முறையே ரூபா 3,768 தொகை, ரூபா 3,415 மற்றும் ரூபா 4,694 வீதம் ரூபா 8,223,190 செலுத்தி 1,600 அறிக்கைப் பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தது. மீண்டும் கட்டளையிடும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.6.1(ஈ) பிரிவிற்கு முரணாக மேற்கொள்ளப்பட்டமையும், Digital Printing முறையின் கீழ் அச்சிடப்பட்ட அறிக்கைப் பிரதிகள் 120 Offset Printing முறையில் ஈடுபடுத்தி அச்சிடப்படாமையின் காரணமாக ரூபா 3,185,633 மேலதிக கிரயமொன்று செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அரச நிதிக் கொள்கை திணைக்களத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட பிரகாரம் வருடாந்த அறிக்கையில் 120 பிரதிகளை அச்சிடுவதற்காக சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீழ் 12 நிறுவனங்களில் இருந்து கூறு விலைகள் கோரப்பட்டிருந்தது. வருடாந்த அறிக்கை 120 அளவில் சிறிய அளவில் அச்சிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் (Offset Printing) முறையில் அச்சிடும் போது அதற்காக கணிசமான கிரயத்தை செலவிட வேண்டி ஏற்பட்டமையைக் கவனத்தில் கொண்டு வருடாந்த அறிக்கையை அச்சிடும் போது Digital Printing Method பயன்படுத்தி மாத்திரம் கூறுவிலை கோரப்பட்டிருந்தமை.<br><br>கா.பொ.த உயர்தரத்தை பயிலுகின்ற சகல பாடசாலைகளையும் மேவுகை செய்யும் வகையில் பகிர்ந்தளிப்பதற்கு அதிமேதகு சனாபதி அவர்களின் ஆலோசனை வழங்கப்பட்டிருக்கும் போது அதன் பிரகாரம் இரண்டாவது அச்சிடலில் 1,600 பிரதிகளை அச்சிடுவதற்காக Offset Printing முறை பின்பற்றுதல் பொருத்தமானது என அமைச்சின் பெரிய அளவிலான பெறுகைக் குழுவில் தீர்மானிக்கப்பட்டது. மேலும் முதலாவதாக வருடாந்த அறிக்கையில் 120 பிரதிகளை அச்சிடும் போது பாடசாலைகளுக்காக பகிர்ந்தளிப்பதற்கு | பெறுகைகளின் போது அரசாங்கத்திற்கு மிகவும் நலன் வாய்ந்த முறை ஒன்றை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.6.1(ஈ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தீர்மானிக்கப்பட்ட 1,600 பிரதிகள் தொடர்பாக அறிந்திருக்காதிருந்ததுடன் அறிக்கைகளின் சிறிய அளவு ஒன்று அச்சிடுவதற்காக மிகவும் நலன் வாய்ந்த Digital Printing முறை பயன்படுத்தப்பட்டது. | |
| **(ஆ) இலங்கை அரசாங்கத்தின் பெறுகை முறைமை ஊடாக இலத்திரனியல் அரச பெறுகை (e-GP) முறைமை தயாரித்தல் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.** | | |
| (i) திறந்த போட்டியாளர் கேள்வி கோரும் தீர்வாக (Solution Provider) தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2007 இல் ஆலோசனையாளர்களை தெரிவு செய்தல் மற்றும் சேவை பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டிக் கோவையின் 3.13 ஆம் பிரிவின் பிரகாரம் தனி மூலமாக தெரிவு செய்தல் (Single Sorce Selection – SSS) அடிப்படையில் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய நிறுவனமாக அறிமுகப்படுத்தி தனியார் கம்பனி ஒன்றுக்கு e-GP முறைமை தயாரிக்கும் ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கும் அதற்காக ஆரம்ப உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும் அமைச்சரவையால் 2019 யூன் 18 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2019 ஒக்தோபர் 11 ஆந் திகதி அமைச்சரவைக்கு சமர்ப்பித்த குறிப்பின் பிரகாரம் மேற்கூறப்பட்ட ஒப்பந்தகாரக் கம்பனி கொழும்பு பல்கலைக்கழகம் (UCSC) இன் கீழ் செயற்படாதிருந்தமையும் சுயாதீனக் கம்பனி ஒன்றாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தரால் 2019 யூன் 17 | அவதானிக்கப்பட்ட நிறுவனத்துடன் ஆரம்ப உடன்படிக்கை கைச்சாத்திடும் போது சமர்ப்பிக்கப்பட்ட ஆவனங்களின் பிரகாரம் கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு உரியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தரால் அறிவிக்கப்பட்டு அதன் பிரகாரம் அந்த நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்திருக்காமை உறுதிப்படுத்திய பின்னர் அது தொடர்பாக அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகளின் போது அரசாங்கத்திற்கு மிகவும் நலன் வாய்ந்ததாக மற்றும் வினைத்திறனான வகையில் சரியான வழங்குனர்களைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆந் திகதி கடிதம் மூலம் நிதியமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | e-GP முறைமை தயாரிக்கும் ஆரம்ப ஒப்பந்தம் ரூபா 71,500,000 தொகையில் கையளித்த ஒப்பந்தத்திற்காக உடன்படிக்கை செய்தல் 2019 நவம்பர் 25 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஒப்பந்தத்தில் போதியளவான செயலாற்றல் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கும் போது e-GP முறைமையின் மென்பொருள் அபிவிருத்தி செயற்பாடுகளின் பரிந்துரையை அபிவிருத்தி செய்தலை உள்ளடக்கி ஆரம்ப ஒப்பந்த பெறுமதியில் ரூபா 81,370,000 உள்ளடக்கி ரூபா 152,870,000 ஆன ஒப்ந்தப் பெறுமதியின் 20 மாத காலத்தில் முறைமையைத் தயாரிப்பதற்காக அந்த ஒப்பந்தகார கம்பனியுடன் 2023 மார்ச் 22 ஆந் திகதி ஆரம்ப ஒப்பந்தத்திற்கு மேலதிகமாக கையொப்பம் இடப்பட்டிருந்தது. | இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் இக்டா (ICTA) மற்றும் உலக வங்கியின் ஆலோசனையாளரால் வழங்கப்பட்ட முன்மொழிவின் பிரகாரம் கம்பனியுடன் காணப்பட்ட ஆரம்ப ஒப்பந்தம் திருத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | ஒப்பந்த காலத்தில் போதியளவான செயலாற்றல் காண்பிக்கப்படாத ஒப்பந்தகாரர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக ஒப்பந்த உடன்படிக்கைகளில் போதியளவான நிபந்தனைகளை உள்ளடக்கி ஒப்பந்த உடன்படிக்கை தயாரித்தல் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2019 நவம்பர் 25 ஆம் திகதி முறைமையை அபிவிருத்தி செய்யும் ஆரம்ப உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விலை ஒப்பீட்டு முறையின் கீழ் மாத்திரம் கேள்வி கோருவதற்கு முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் e-GP முறைமையில் பதிவு செய்த அரசாங்க நிறுவனங்கள் 465 ஆக இருந்ததுடன் அதில் 69 நிறுவனங்கள் அதாவது 15 சதவீதம் மாத்திரம் e-GP முறைமையில் சந்தையில் | தற்போது விலை ஒப்பீட்டு முறையின் கீழ் கேள்வி கோருவதற்கு முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டின் போது திறந்த போட்டியாளர் கேள்வி சமர்ப்பிக்கும் முறையில் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலுமாக promise.lk அபிவிருத்தி செய்யப்படுகின்றது. 2024 மே 22 ஆம் திகதி வரையில் e-GP முறைமையில் பதிவு செய்த 523 அரசாங்க நிறுவனங்கள் இருந்ததுடன் அதில் 152 நிறுவனங்கள் அதாவது 30 சதவீதம் மாத்திரம் e-GP முறைமையில் சந்தையில் விலை ஒப்பீட்டு | அரச நிறுவனம், e-GP முறைமையில் சந்தை விலை ஒப்பீட்டு முறையின் செயற்பாடுகளுக்கு உள்ளடக்குதல் வேண்டும். அரச நிறுவனங்களில் சகல பெறுகைகளுக்காவும் e-GP முறைமையைப் பரவலாக்குதல் மற்றும் தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள மொடியூல்களைப் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை |

| | | |
|---|---|---|
| விலை ஒப்பீட்டு முறையின் கீழ் செயற்படுவதற்கு தகுதி பெற்றிருந்தது. நிதி அமைச்சினால் e-GP முறைமை ஊடாக பெறுகை நடவடிக்கைகள் 03 சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதுடன் திறைசேரியின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்களும் இந்த பெறுகை செயற்பாடுகளுக்கு முறையாக கட்டாயமாக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | முறையில் செயற்பாடுகளுக்கு உட்பட்டிருந்தது. நிதியமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள 18 திணைக்களங்கள் தற்போது இலத்திரனியல் பெறுகை முறைமையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டின் பெறுகையில் 28 இலத்திரனியல் பெறுகை முறைமை ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. | எடுத்தல். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.3.1 வாகனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தால் அமைச்சின் போக்குவரத்து பிரிவிற்கு வாகன செயற்பாட்டு நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்காக பயன்படுத்தக் கூடிய கணனி முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த முறைமையைப் பயன்படுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணனி உள்ளீட்டு முறைமை தொடர்பாக பயிற்சி ஒன்று தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட போதும் அந்த உத்தியோகத்தர்கள் தற்போது போக்குவரத்துப் பிரிவில் சேவையில் ஈடுபட்டிருக்காமையினால் புதிய உத்தியோகத்தர்களுக்காக முறையான பயிற்சி ஒன்று வழங்கி அடுத்து வரும் ஆண்டில் இருந்து இந்தக் கணனி உள்ளீட்டு முறைமையை மீண்டும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | தயாரிக்கப்பட்டுள்ள கணனி செயற்பாட்டு முறைமையை பயன்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டின் போது மோட்டார் திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் நிதி அமைச்சின் பெயரில் பதிவு | தற்போது 176 வாகனங்கள் தொடர்பான தகவல்களை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள சகல வாகனங்கள் தொடர்பாகவும் பௌதீக இருப்பு மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த 257 வாகனங்கள் காணப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களின் எண்ணிக்கைக்கு இடையே 176 வாகனங்களின் பௌதீக இருப்பு உறுதிப்படுத்தப்பட இல்லை. அதனிடையே 99 வாகனங்கள் தொடர்பான பௌதீக இருப்பை உள்ளடக்கிய தகவல்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் கணனி தரவு முறைமையில் ஏனைய தரப்பினரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுமொத்தமான ரூபா 62,639,000 பெறுமதியுடைய 10 வாகனங்கள் அமைச்சுக்கு சொந்தமான வாகனமாக அமைச்சின் நிலையான சொத்துப் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த அமைச்சின் கீழ் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள் இந்த அமைச்சிற்கு கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்படாத வாகனங்களை நிலைய சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கியிருந்தமை யால் அது தொடர்பான தகவல்களை விசாரித்து பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அமைச்சிற்குச் சொந்தமான 44 வாகனங்கள் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை முறையான பிரகாரம் கையளிக்கப்படாதிருந்ததுடன் ஏனைய நிறுவனங்களில் இருந்து அமைச்சிற்கு முறையாக கையேற்கப்படாமல் 11 வாகனங்கள் பெறப்பட்டிருந்தது. | தற்போது அவ்வாறு வழங்கப்பட்டுள்ள வாகனங்களை முறையான பிரகாரம், கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்கள் ஏனைய நிறுவனங்களுக்கு கையளித்தல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் இருந்து கையேற்றல் முறையான பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ நலிவுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வரி முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு 2011 ஆம் ஆண்டு முதல் 2023 ஒக்தோபர் 31 ஆம் திகதி வரை 1,706 வரி முறைப்பாடுகள் கிடைத்துள்ளது. அது தொடர்பாக பின்வரும் | | |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வரி முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பதிவு செய்துள்ள குறித்துரைத்த ரீதியில் இனங்காணப்படாத 617 முறைப்பாடுகள் காணப்பட்டதுடன் அதற்குரிய சர்ச்சைக்குரிய மொத்த வரித் தொகையின் பெறுமதி ரூபா 120,632,702,366 ஆகும். இதில் ரூபா ஒரு பில்லியனை விஞ்சுகின்ற 34 மேன்முறையீடுகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 69,971,348,414 அதாவது தீர்வு வழங்கப்படாத மொத்த முறைப்பாடுகளின் பெறுமதியில் 58 சதவீதமும், ரூபா 100-1,000 வீச்சில் மொத்தமாக ரூபா 40,264,266,831 ஆன 133 முறைப்பாடுகள் அதாவது திர்வு வழங்கப்படாத மொத்த முறைப்பாடுகளின் பெறுமதியில் 33 சதவீதமும் ஆக இருந்தது. | 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வரி முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பதிவு செய்துள்ள குறித்துரைத்த ரீதியில் இனங்காணப்படாத 617 முறைப்பாடுகள் காணப்பட்டதுடன் அதற்குரிய சர்ச்சைக்குரிய மொத்த வரித் தொகையின் பெறுமதி ரூபா 120,632,702,366 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் உரிய முறைப்பாட்டு விசாரணை செயற்பாடுகளின் போது வரி செலுத்துபவர்கள் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கிடையே சமரசத்திற்கு கொண்டு வருவதற்கு வரி முறைப்பாட்டு ஆணைக்குழு முன்னின்று ஆணைக்குழுவினால் தீர்ப்பு வழங்கும் போது இந்த பிரச்சனைகளில் மொத்த வரித் தொகையின் பெறுமதி மாற்றமடையக் கூடியதாக இருந்தமையால் குறித்துரைத்த ரீதியில் உரிய முறைப்பாட்டின் அடிப்படையில் அறவிடுவதற்கு ஏற்பட்டிருந்த வரித் தொகை (Disputed Value of Tax) கணிப்பிடப்படவில்லை. | வரி முறைப்பாடுகள் தொடர்பாக பரிசோதனை நடவடிக்கைகளை விரைவுபடுத்தி நிலுவை வரி தொகையை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | வரி முறைப்பாட்டு ஆணைக்குழுவில் பதிவு செய்துள்ள மொத்த முறைபாடுகளின் எண்ணிக்கையில் 1,059 முறைப்பாடுகள் அதாவது 62 சதவீதம் வருமான வரி தொடர்பானதாகும். அந்த முறைப்பாடுகளில் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் 455 இற்கு இடையே பதிவு செய்து 03 - 12 வருடங்களான வீச்சில் தீர்மானிக்கப்படாத சர்ச்சைக்குரிய வரி பெறுமதி ரூபா | 2011 இன் 23 ஆம் இலக்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு சட்டத்தின் அங்கத்தவர்கள் மூவர் வீதம் ஆன மூன்று சபைகள் நடாத்திச் செல்வதற்கு நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டு வரையும் அங்கத்தவர்கள் மூன்று பேர்களை உடைய ஒரு தீர்வு சபையாக ஆணைக்குழு செயற்பட்டிருந்ததுடன் அந்தக் காலத்தின் போதும் மூன்று வருட கால இறுதியின் போது புதிய அங்கத்தவர்களை நியமித்தல் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக மேன்முறையீட்டு விசாரணை நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | 29,466,916,108 ஆன 183 முறைப்பாடுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | வில்லை. அவ்வாறே COVID - 19 தொற்றுநோய் பரவிய கால எல்லையிலும் இந்த ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு இடையூறாக இருந்ததன் காரணமாக முறையீடுகளுக்கு தீர்வினை வழங்குதல் தாமதமடைந்திருந்தது. சனாபதி அவர்களினால் 2022.09.01 ஆந் திகதி முதல் தற்போதயை அங்கத்தவர்கள் ஒன்பது பேரை நியமித்ததுடன் முறையான மேன்முறையீட்டு விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய இலக்கம் 2187/27 என்ற வர்த்தமானியின் மூலம் கலைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட வனவிலங்குகள் நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் இலங்கை வெகுசன ஊடக பயிற்சி நிறுவனம் நிதி அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டு 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 03 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும் இந்த நிறுவனங்கள் இரண்டும் கலைக்கப்பட்டு சட்ட ரீதியான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | • வன சீவராசிகள் நம்பிக்கைப் பொறுப்பு ஆரம்பத்தில் இருந்து மூடப்படும் வரை சகல ஆண்டுகளுக்கும் உரிய இறுதிக் கணக்கு அறிக்கைகள் தயாரித்து கணக்காய்வு செய்யப்படவில்லை. அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ள பிரகாரம் நி-றுவனத்தின் வங்கிக் கணக்குகளை மூடி சகல சொத்துக்களும் வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டமையால் மூடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. வனசீ-வராசிகள் நம்பிக்கைப் பொறுப்பை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்த முறை தொடர்பாக ஆலோசனை-களைப் பெற்றுக் கொள்வதற்கு சட்டமா அதிபருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.<br>• இலங்கை வெகுசன ஊடக பயிற்சி நிறுவனத்தின் தகவல்கள் கண்டறிய முடியாதிருந்தது சனாபதி செயலகம், வெகுசன ஊடகத் துறை அமைச்சு மற்றும் இலங்கை மன்றம் என்ற நி-றுவனம் இந்த தகவல்கள் அவர்களிடம் | உரிய நிறுவனங்களில் கலைத்தல் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காணப்படாதிருந்ததாக அறிவித்திருந்தது. இலங்கை மன்றக் கல்லூரியில் மீண்டும் தகவல்களை விசாரித்து 2024.05.16 ஆந் திகதி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதுடன் பதில் இதுவரை கிடைத்திருக்கவில்லை. | |
| (இ) | அமைச்சின் 12 உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைக்குரிய அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது. | | |
| (i) | அமைச்சினால் உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கும் போது உத்தியோகத்தர்களுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 05 உத்தியோகத்தர்களுக்காக 05 வருட கால எல்லைக்காகவும், 05 உத்தியோகத்தர்களுக்காக அமைச்சில் சேவையாற்றுகின்ற தாக்கல் மற்றும் அமைச்சின் செயலாளரால் தீர்மானிக்கப்படுகின்ற வகையில் ஏதாவது ஒரு காலப்பகுதிக்காக குறிப்பிடப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்கும் கால எல்லை தீர்மானித்தல் தொடர்பாக ஒரே வகையான கொள்கை ஒன்று பின்பற்றப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | - | உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கும் கால எல்லை தொடர்பாக ஒரே கொள்கை ஒன்றைப் பின்பற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அமைச்சினால் 04 உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களின் உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கால எல்லை கடந்திருந்ததுடன் 2024 மே 22 ஆந் திகதி வரையிலும் உரிய உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைச்சிற்கு மீள பெற்றுக்கொள்வதற்கோ அல்லது காலத்தை நீடித்து புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கோ நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்களைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சினால் எழுத்து மூலம் 2024 மார்ச் இன் போது அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2024.05.31 ஆந் திகதி வரையும் உத்தியோகபூர்வ இல்லங்களைக் கையளிக்காத 2024 மார்ச் மாதம் முதல் தாபனவிதிக் கோவையின் பிரகாரம் 8 சதவீத தண்டப்பணம் 12.5 சதவீத வீட்டு வாடகை மற்றும் பொருளாதார வாடகை அறவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கப்பட்டிருந்த கால எல்லையை விஞ்சும் போது மீண்டும் உத்தியோகபூர்வ இல்லங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | உத்தியோகபூர்வ இல்லங்களை மீள கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சினால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இருவரும் கணக்காய்வுத் திகதியான 2023 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் உரிய உத்தியோகபூர்வ இல்லத்தை கையளிப்பதற்கோ அல்லது உடன்படிக்கைக் காலத்தை நீடிப்பதற்கோ நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் வீட்டில் இருந்து விலகிச் செல்லுமாறு உத்தியோகத்தருக்கு தீர்மானித்து அவர் அவ்வாறு செல்லவில்லையாயின் 1971 இன் 03 ஆம் இலக்கம் மற்றும் 1974 இன் 40 ஆம் இலக்கம் என்ற சட்டங்களின் திருத்தப்பட்ட 1969 இன் | இந்த உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சினால் எழுத்து மூல 2024 மார்ச் மாதத்தின் போது அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2024.05.31 ஆந் திகதி வரையிலும் உத்தியோகபூர்வ இல்லங்களைக் கையளிக்காதிருக்குமாயின் 2024 மார்ச் மாதம் முதல் தாபன விதிக் கோவையின் பிரகாரம் 8 சதவீதம் தண்டப்பணத்துடன் 12.5 சதவீத வீட்டு வாடகை மற்றும் பொருளாதார வாடகை அறவிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ இல்லங்களை கையளிப்பதற்கு தவறுகின்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 07 ஆம் இலக்க அரசாங்கத்தின் வீடுகள் (உரித்தை மீள பெற்றுக்கொள்ளல்) சட்டத்தின் கீழ் அவர் அந்த வீட்டில் இருந்து விலகிச் செல்வதற்கும், வாடகைக் காலத்தை விஞ்சிய வீடுகளில் குடியிருக்கின்ற காலத்திற்காக தண்டப் பண வாடகையும் அவரிடம் இருந்து அறவிட வேண்டி இருந்தமை காணப்பிக்கப்பட்டிருந்த போதும் 07 வருடங்கள் முதல் உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் கையளிக்காதிருந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்காக அமைச்சினால் 2023 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | | |
| (iv) | அமைச்சுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லம் ஒன்று 2016 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்குரிய ஆரம்பக் கோவை தொலைந்து போயிருந்ததது. | ஆரம்ப கோவை தொலைந்து போனமையினால் தற்போது உள்ள கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கோவைகளை பேணிச் செல்கின்ற விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு உரிய கோவைகளை பாதுகாப்பாக பேணிச் செல்லும் பொறுப்பைக் கையளித்தல் மற்றும் தொலைந்து போன கோவையைக் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அமைச்சின் ஒட்டுமொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 103 ஆகக் காணப்பட்டது. அதில் சிரேஸ்ட நிலையில் 18 வெற்றிடங்களும், இரண்டாம் நிலையில் 57 வெற்றிடங்களும் ஆகும். | வருடாந்த இடம் மாற்றம், வருடாந்தம் அல்லாத இடம் மாற்றங்கள், இன் கீழ் நியமித்தல், அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்ற புதிய ஆட்சேர்ப்பின் கீழ் நியமிக்கப்படுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் சேவை தேவையின் அடிப்படையில் அமைச்சரவையால் மேற்கொள்ளப்படுகின்ற நியமங்கள் அமைச்சரால் நியமிக்கப்படுகின்ற நியமனங்கள் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதுடன் காணப்படுகின்ற வெற்றிடங்கள் தொடர்பாக உரிய நியமன அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக இந்த தகவல்களுக்காக அமைச்சின் மூலம் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட வில்லை. | முறையான பிரகாரம் நடவடிக்கை எடுத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஏனைய நிறுவனங்களில் சேவைக்காக விடுவிக்கப்பட்ட 15 உத்தியோகத்தர்களுக்காக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சினால் சம்பளம் மற்றும் படிகளாக கூட்டுமொத்தமாக ரூபா 8,086,967 செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சரவையினால் உரிய நியமன அதிகாரியினால் சேவை தேவையின் அடிப்படையிலும் மற்றும் உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோரிக்கையின் நியாயமாக கொள்ளப்பட்டு பின்னர் குறித்துரைத்த கால எல்லைக்காக வேறொரு அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனத்திற்காக உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தது. | சேவையாற்றுகின்ற நிறுவனங்களில் இருந்து சம்பளம் மற்றும் படிகளைப் பெற்றுக்கொள்வதற்கு முறையானதாக பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |